அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 32/91(IV)

எனது இல. EST-3/POLIC/04/0054
பொது நிர்வாக மற்றும்
அனர்த்த முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.

2019.03.13

அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்
மாகாண பிரதம செயலாளர்களுக்கும்
திணைக்களத் தலைவர்களுக்கும்

**உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் உரிமைகளையுடைய அரசாங்க அலுவலர்கள்**

1991.10.31 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 32/91(I) மற்றும் 2008.01.10 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் 32/91(III) தொடர்பாக தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. உள்ளூராட்சி நிறுவனமொன்றின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட சம்பளமற்ற விடுமுறை பெற்றுக் கொண்ட அரசியல் உரிமைகளையுடைய அரசாங்க அலுவலர்களுக்கு பின்வருமாறு அனுசரணை வழங்குவதற்கு 2019.01.14 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

> “உள்ளூராட்சி நிறுவனமொன்றின் தலைவராக தெரிவு செய்யப்பட்டு, சம்பளமற்ற விடுமுறை பெற்று, அரசியல் உரிமைகளைக் கொண்ட அரசாங்க அலுவலர்கள் அப்பதவிக்காலத்தின் இறுதியில் மீண்டும் சேவைக்கு வரும்போது அல்லது அரச சேவையிலிருந்து ஓய்வுபெறும் போது, அந்த சம்பளமற்ற விடுமுறைக் காலத்திற்கான சம்பள ஏற்றங்களை ஈட்டிக்கொண்டதாக கருதி நிலுவை செலுத்தாது குறித்த சம்பள படிநிலையில் அமர்த்தப்படுதல் வேண்டும்.

03. இவ் ஏற்பாடுகள் 2019.01.14 ஆந் திகதியில் இருந்து நடைமுறைப்படுத்தப்படும். .

ஒப்பம்./ஜே. ஜே. ரத்னசிறி
செயலாளர்
பொது நிர்வாக மற்றும்
அனர்த்த முகாமைத்துவ அமைச்சு